**செய்தி வெளியீடு எண்:421** **நாள்: 03.07.2017**

**செய்தி வெளியீடு**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25 % ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சேர்க்கைக்கான குழந்தைகளைத் தெரிவு செய்யும்பணி 31.05.2017 அன்று அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளில் ஒருசிலர் சேர்க்கைக்கு வராத காரணத்தால் நிலுவையாக உள்ள காலியிடங்களுக்குச் சம்மந்தப்பட்ட பள்ளிகளில் 20.06.2017 அன்று நேரடியாகச் சேர்க்கை வழங்கப்பட்டது.

மேற்படி சேர்க்கை நடைமுறைகளின் மூலம் **47,129** வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் 25 % ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு சேர்க்கை வழங்கப்பட்டபின்னர் காலியாக உள்ள இடங்களில் சேர்க்கைக்கு இணைய வழியாக விண்ணப்பிக்க **03.07.2017** முதல் **25.07.2017** வரை மீண்டும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இதற்கான வசதி www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் / மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர் / மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் / வட்டார வள மைய மேற்பார்வையாளர் ஆகியோரது அலுவலகங்களில் எவ்விதக் கட்டணமும் இல்லாமல்

விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். விண்ணப்பம் வெற்றிகரமாகப் பதிவேற்றம் செய்யப்பட்ட விபரம், பதிவு செய்யப்பட்ட பெற்றோரின் கைபேசி எண்ணிற்குக் குறும் செய்தியாக அளிக்கப்படும்.

மேலும் மாநிலம் முழுவதும் உள்ள 10,000திற்கும் மேற்பட்ட அரசு இ–சேவை மையங்களைப் பதிவேற்றம் செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேற்காணும் வழிகாட்டுதலின்படி சமுதாயத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதி பள்ளிகளில் சேரும் வாய்ப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**